சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.136/2017

17.03.2025

வா.சா.1 திருமதி. மங்களம், க/பெ.கோபால்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகளிடமிருந்து 5 குழி நிலம் வேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் 5 குழியை தான் சாமிநாதனுக்கு விற்பனை செய்தேன். ஆனால் 15 குழியாக எழுதிக்கொண்டார்கள். நான் சாமிநாதனிடமும், சரவணிடமும் எந்த ஆவணமும் எழுதிவாங்கவில்லை என்றாலும் அவர்களும் எனக்கு எந்த ஆவணங்களும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா 1 வதுஅயிட்ட சொத்து எனக்கு சொந்தமானது இல்லை என்றால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்து எனது கணவர் கோபால் பெயரில் உள்ளதால் நான் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணம் என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்காது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை வைத்தியநாத அய்யரிடமிருந்து கிரயம் வாங்கினேன். எந்த வருடம் என்றால் 40 வருடங்களுக்கு முன்பு வாங்கினேன். நான் வாங்கிய சொத்தின் சர்வே எண் தெரியாது. விஸ்தீரணம் 47 குழி. 1 ஆம் பிரதிவாதி சரவணனின் தகப்பனார் பெயர் கோவிந்தராஜ். சாமிநாதனின் தகப்பனார் பெயர் கணபதி. கோவிந்தராஜ், கணபதி ஆகியோர்களின் தகப்பனார் பெயர் கூத்தபடையாச்சி. கணபதியும், கோவிந்தராஜும் கூத்தபடையாச்சியின் மகன்கள். கூத்தபடையாச்சிக்கு சொத்து ஆதியில் சொந்தம் என்றால் சரிதான், நாங்கள் கிரயம் வாங்கியுள்ளோம். கூத்தபடையாச்சி சொத்தை கோவிந்தராஜ் 12 குழியாகவும் கணபதி 12 குழியாகவும் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். கோவிந்தராஜ்13 குழியை யாருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சாமிநாதனுக்கு 1981 ஆம் வருடம் தாவா 2 வது அயிட்டத்தை விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். ஏற்கனவே கணபதிக்கு கிடைத்த 10 குழியையும் என்னிடம் வாங்கிய 5 குழியையஹம் சேர்த்து சரவணனுக்கு 15 குழியாக விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. புல எண் 172/12, 172/13 ஆகிய சொத்துக்களில் எனக்க எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மீதமுள்ள சொத்து என் கணவருக்கு தான் சொந்தம் என்றாலும் எனக்கு சொத்தில் உரிமையில்லை என்றாலும் சரியல்ல. நான்

வேண்டும் என்றே புதிய சர்வே எண்ணை குறிப்பிடாமல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சட்டப்படி வழக்கு தாக்கல் செய்ய உரிமையில்லாததால் நான் தாக்கல செய்துள்ள வழக்கு தள்ளுபடி செயயப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் எந்த ஒப்பந்தமும் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் அதனடிப்படையிலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. சரவணன் கிரயம் பெற்ற மற்றும் பூர்வீகமாக கிடைத்த 27 குழியையும் இன்றைய தேதிவரை அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் தாவா சொத்தை சரவணன் அனுபவம் செய்துவருவதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் சரவணனுக்கு எதிராக சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுனுத்து எனக்க எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து ஆவணம் தாயார்செய்து அதை பதிவு செய்யாமல் வழக்கை தாக்கல் செய்திருப்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. எனவே நான் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 07.06.2010 ல் ஏற்பட்ட ஆவணத்தை ரத்து செய்யக்கோரி 2017 ல் வழக்கு தாக்கரல் செய்துள்ளதால் வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரத்து செய்ய கோரி நான் பரிகாரம் கேட்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதிக்கு எதிராக கேட்கும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இவ்வழக்கில் ஆணையர் தாக்கல் செய்த வரைபடம், அறிக்கை நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆகும்.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.